த. நா.ச.பே. எண் : 015 நாள் : 20.06.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.6.2017) சட்டப்பேரவையில், கோயமுத்தூர் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தின் மீது நடைபெற்ற பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார்.

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாநகரம், இரத்தினபுரி காவல் நிலைய சரகம், காந்திபுரம், 2வது வீதி விரிவு என்ற முகவரியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கோவை மாவட்டக்குழு அலுவலகம் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்தில், திரு. ஆனந்தன் என்பவர் முழுநேர ஊழியராகவும், ஓட்டுநராகவும் பணிபுரிந்து வருகிறார்.

கடந்த 17.6.2017 அன்று காலை வழக்கம் போல் திரு. ஆனந்தன் நடைபயிற்சிக்கு சென்றுவிட்டு 7 மணியளவில் கட்சி அலுவலகம் வந்த போது, தீப்பற்றி எரிந்தது போன்ற வாசனையை உணர்ந்திருக்கிறார். அவர் அலுவலக வளாகத்தினுள் சென்று பார்த்தபோது, அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் வலது பக்க கதவுகளில் கரும்புகை படிந்திருந்ததையும், அதே போன்று அலுவலக ஜன்னல் ஒன்றில் கரும்புகை படிந்திருந்ததையும் பார்த்துள்ளார். மேலும், கீழே மண்ணெண்ணை வாசனையுடன் கூடிய ஒரு கண்ணாடி பாட்டில் மற்றும் கருகிய நிலையில் பெட்ரோல் வாசனையுடன் கூடிய ஒரு பிளாஸ்டிக் பாட்டில் கிடந்ததையும் பார்த்துள்ளார்.

இது தொடர்பாக, திரு. ஆனந்தன் இரத்தினபுரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், வழக்கு (குற்ற எண். 480/2017 சட்டப்பிரிவுகள் 435 இதச மற்றும் பிரிவு 3 இந்திய வெடிப்பொருட்கள் சட்டம் 1908) பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்று, தடய அறிவியல் நிபுணர் குழுவினரையும், துப்பறியும் மோப்ப நாய் பிரிவினரையும், மற்றும் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழக்க செய்யும் குழுவினரையும் அங்கு வரவழைத்து, தடயங்களைக் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக, காவல் துறையினர் மூன்று தனிப்படைகள் அமைத்து, எதிரிகளைக் கண்டுபிடித்து கைது செய்ய பல்வேறு கோணங்களில் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**